பக்கங்கள் . எட்டு

யாழ்ப்பாணம் நல்லூர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 30 திங்கட்கிழமை (15-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 277

# யாலசரணாலயத்தில் விடுதிகள் தீக்கிரை!

## உல்லாசப்பயணிகள் வான் கடத்தப்பட்டது!!

கொழும்பு, செப்ரெம்பர் 15

**யால சரணாலயத்தில் உள்ள உல்லாசப் பயணிகள் தங்கும் விடுதிகளில், மூன்று விடுதிகள் நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டு பின்னர் தீயிட்டு அழிக்கப்பட்டன.**

அங்கிருந்த உல்லாசப் பயணிகளின் வான் ஒன்று அந்தக் கோஷ்டியால் கடத்தப்பட்டது.

பின்னர் அந்த வான் அநாதரவாக விடப்பட்டு பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது.

அங்கு பணியாற்றும் ஊழியர் ஒருவரை அக்கோஷ்டியினர் கடத்திச் சென்றபோதும், பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து இராணுவத்தினரும், பொலீஸாரும் அங்கு தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதல் நடத்திய குழுவில் எண்மர் இடம்பெற்றிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வாழைச்சேனையில் மோதல்!

கொழும்பு, செப். 15

வாழைச்சேனை, கடவன்கேணியில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் மாலை 6.00 மணி அளவில் இடம் பெற்றது.

ரோந்து சேவையில் ஈடுபட்ட பின்னர் திரும்பிக் கொண்டிருந்த பொலீஸார் மீது சுமார் 20பேர் கொண்ட விடுதலைப்புலிகள் குழு தாக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப இந்த அறிக்கைகளும் கிடப்பிலோ...?

## வன்னியில் பெரும் மழை

வன்னியில்கடந்த சில நாள்களாக கடும்மழை பெய்து வருகின்றது.

நேற்று முன்தினம் தொடர்ந்து 2 மணி நேரம் பெய்த மழையால் வெள்ளம் ஏற்பட்டதாகவும் காட்டுப் பகுதிகளில் கொட்டில்களில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்து பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-164

### காணாமற் போனோர் விவகாரம்:

## அறிக்கைகள் வெளிவந்தால் 170 படையினர் கட்டாய லீவு

கொழும்பு, செப். 15

''கடந்த காலங்களில் காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் வெளிவருமாயின் 2 இராணுவ அதிகாரிகள் உட்பட 170 படையினர் கட்டாய லீவில் அனுப்பப்படலாம்.''

இப்படி ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் தெரிவிக்கிறது.

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகள் நடத்தி வந்த ஆணைக்குழுக்கள் தமது அறிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளன.

இந்த அறிக்கைகளை மனித உரிமை அமைப்புக்கள் வரவேற்றுள்ளபோதிலும், படையினர் மத்தியில் அந்த அறிக்கைக்கு அவ்வளவு வரவேற்பு இல்லை என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-150-3)

## இல்மனைட்டுடன் கப்பல் மூழ்கிறது!

### ஒரு சிறு பகுதியே காப்பாற்றப்பட்டது

கொழும்பு, செப். 15

கடந்த 10 ஆம் திகதி புல்மோட்டைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் சேதமடைந்த ''எம்.வி. கோடியாற்றி'' என்னும் சீனச் சரக்குக் கப்பலை மீட்க எடுக்கப்பட்ட முயற்சி பலனளிக்கவில்லை என்று கடற்படையினர் தெரிவித்ததாக 'லக்கண்ட' தனியார் வானொலி நேற்றிரவு தெரிவித்தது:

அக்கப்பலில் ஏற்றப்பட்ட 26 ஆயிரத்து 235 மெற்றிக் தொன் இல்மனைட்டில் 2 ஆயிரம் மெற்றிக் தொன் மட்டுமே இறக்கப்பட்டுள்ளதாகவும்—

அக்கப்பலை மீட்க எடுக்கப்பட்ட முயற்சி பலன் அளிக்காததால் மிகுதி இல்மனைட்டுடன் அக்கப்பல் மூழ்கிறது என்றும்—மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

## படையினரின் பொருள்கள் ஏற்றி இறக்குவதில் சிரமம்!

### லயன் எயரின் உதவி கோரப்படுகிறது

கொழும்பு, செப்.15

வடக்கே படையினரின் சரக்குப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு போதுமான விமான வசதி கிடையாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து லயன்எயர் நிறுவனத்தின் உதவியைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்சமயம் படையினரையும், அவர்களுக்கான சரக்குகளையும் எடுத்துச் செல்ல மூன்று அன்ரனோவ் விமானங்களும், ஒரு வை 12 ரக விமானமும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன

இந்த விமானங்கள் படையினரின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானவையாக இல்லாததாலேயே 'லயன் எயர்' நிறுவனத்திடம் உதவி கோரப்பட்டுள்ளது.

''லயன் எயர்'' நிறுவனம் முன்னாள் விமானத் தளபதியாலும், தமிழர் ஒருவராலும் நடத்தப்பட்டு வருவதும் —

''லயன் எயர்'' விமானங்களில் வெளி நாட்டவர் பணி புரிவதும் — குறிப்பிடத்தக்கது. (இ-150-3)

## 17 படையினரின் சடலங்கள் செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு

வவுனியா, செப். 15

கடந்த புதன்கிழமை புளியங்குளத்துக்கு அருகே இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 17 படையினரின் சடலங்கள் நேற்று மல்லாவியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

புலிகளால் கைப்பற்றப்பட்ட மேலும் 13 படையினரின் சடலங்கள் அழுகியதையடுத்து அவை வன்னியில் எரிக்கப்பட்டதாக மல்லாவிப் பகுதியில் இருந்து வவுனியா வந்தவர்கள் தெரிவித்தனர். (இ-164-3)

## எரிவாயு நிலையம் ஒன்றில் நேற்று பெரும் தீ விபத்து!

### ஆந்திராவில் 20 பேர் பலி!!

ஹைதராபாத், செப். 15

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள எரிவாயு நிலையத்தில் நேற்று இடம்பெற்ற பெரிய தீ விபத்தில் 20 பேர் வரை பலியானார்கள். 16 பேர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

விசாகப்பட்டணத்தில் உள்ள ஹிந்துஸ்தான் பெற்றோலியம் நிறுவனத்தின் எரிவாயு நிலையத்தில் இந்த தீ விபத்து ஏற்பட்டது.

நான்கு எரிவாயு டாங்கிகளில் தீப்பிடித்ததாகவும் தீ சமையல் எரிவாயு நிலையத்திலும் அதன் [illegible] களிலும் வேகமாகப் [illegible] தாகவும் தெரிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நவீன சந்தை திறக்கப்படுவதை எதிர்த்து திருமலையில் ஆர்ப்பாட்டம்

### இடம் ஒதுக்கல் குறித்து சர்ச்சை

திருகோணமலை, செப். 15

திருகோணமலையில் 60லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன சந்தையை திறக்கக் கூடாது என்று கோரி நேற்று ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

திருகோணமலை மாநகர சபையால் அமைக்கப்பட்டுள்ள இச்சந்தையை எதிர் வரும் முதலாம் திகதி திறக்கவும்-

நேற்று சமயக் கிரியைகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் திருகோணமலை நகரசபைத் தலைவர்சூரியமூர்த்தியைச்சந்தித்த பொலீஸ் அதிகாரிகள், புதிய சந்தையை திறக்க வேண்டாம் என்று கோரிக் கடிதம் ஒன்றைக்கையளித்தனர்.

அதே நேரம்— இந்துமுறைப்படி அன்றிரவே பால்காய்ச்சி [illegible] அவர் முடித்திருந்தார்.

நேற்றுக்காலை பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் சமயக் கிரியைகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஏராளமான பொலீஸார் நேற்றுக்காலை சந்தைப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர்.

பௌத்த கிரியைகளை மேற்கொள்ள இரு பிக்குகள் அங்கு வந்து சேர்ந்தனர்.

இச்சமயத்தில் பழைய சந்தையில் வியாபாரம் செய்யும் சிங்கள, தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி ஊர்வலமாக சந்தைப் பகுதிக்கு வந்தார்கள்.

''சந்தையை திறக்காதே'' ''சிங்கள தமிழ் ஒற்றுமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பத்மநாதன் தாக்கல் செய்த

## அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றம் விசாரிக்கும்

கொழும்பு, செப். 15

கடந்த மாதம் 28 ஆம் திகதி வெள்ளவத்தையில் வைத்து சி. ஐ. டியினரால் கைது செய்யப்பட்டு 4 ஆவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். முன்னாள் அரச அதிபர் செ. பத்மநாதன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு ஏற்கப்பட்டுள்ளது,

சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரி தவராஜா ஊடாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் புதிய சிவன் வீதியில் பாலம் இன்னும் திருத்தவில்லை

கொழும்புத்துறை, செப். 15

நல்லூர் புதிய சிவன் வீதியில் உள்ள பாலம் ஒன்று கடந்தகால இராணுவ நடவடிக்கையின் போது தகர்க்கப்பட்டுள்ளது. மக்கள் அப்பகுதியில் குடியேறி நீண்ட காலம் கடந்த பின்னரும் இன்னமும் இப்பாலம் திருத்தப்படவில்லை. இதனால் இவ் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

நல்லூர் பாரதி சிலையடிப் பகுதியில் இருந்து திருநெல்வேலி சிவன் கோயிலடி வரை செல்லும் நீண்ட இப்பாதை அப்பகுதி பொது மக்களின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டது. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக மணல் ஒழுங்கையாகவே காணப்படும் இவ்வீதி உரிய முறையில் செப்பனிடப்படவில்லை. (ஐ-30)

# பொலீஸாரைச் சுட்டுவிட்டு கைதிகள் தப்பி ஓட்டம்

மறைத்து வைத்திருந்த றிவோல்வரினால் பொலீஸ் நிலையத்தினுள் வைத்து பொலீஸாரை நோக்கி சுட்டுவிட்டு கைதிகள் நான்கு பேர் தப்பி ஓடினர்.

முல்லேரியாவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வெலிக்கடையில் உள்ள குதிரைப் பந்தயம் பிடிக்கும் ஒரு ஸ்தாபனத்தில் 12 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்தது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 4 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒருவரே தன்னிடமிருந்த றிவோல்வரால் பொலீஸாரை சுட்டார் என்றும் —

தப்பியோடிய நான்குபேரில் இருவர் பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், மற்றைய இருவரும் தேடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5 ரி)

## அதிபர் கூட்டம்

உடுவில் கல்விக் கோட்டத்தை சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கோட்டக் கல்வி அதிகாரி திரு. அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும். [இ-152]


சந்நிதி முருகா! தேரேறிப் பவனி வரும்
உன் அருட் திருக்கோலம் கண்டு
இறைஞ்சுவதற்கு வந்திருக்கும்
எமது வாடிக்கையாளர், நண்பர்கள் உட்பட
அனைத்து பக்தகோடிகளுக்கும் உன் அருள் கிடைக்க
வேண்டி நிற்கும்;

**சாரங்கா நகை மாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [இணையகம்]

**அருள் முருகன் நகையகம்**
96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [தலைமையகம்]

**சிவா நகை மாடம்**
கண்டி வீதி,
சாவகச்சேரி. [கிளையகம்]

(சி/1573)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்: 26 — 05 — 1926



விண்ணில்: 17 — 08 — 1997

## அமரர் முருகப்பர் வேலுப்பிள்ளை

( மரக்காலை உரிமையாளர் )

பாசத்துடன் எமை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே! எந்நாளும் உங்களை நாம் மறவோம்.

அன்னாரது இறுதிக் கிரியையில் கலந்துகொண்டு அனுதாபச் செய்திகளை வழங்கியும், பல்வேறு வழிகளில் உதவிகள் நல்கி, எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை ( 16 - 09 - 97 ) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நின் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்**

சாமியன் அரசடி,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

(சி/1569)

## சமய சந்நிதியில்

இருபாலை ஸ்ரீ லிங்கப் பிள்ளையார் கோயில் இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெறும். நாளை தீர்த்தத் திருவிழா நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன்- ஐயனார் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்கு திருவிளக்கு, சுமங்கலி பூசை நடைபெறும். அம்மன் சிங்கவாகனத்தில் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

நாளை முற்பகல் 10-45 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

நீர்வேலி ஸ்ரீ அரசசேகரிப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை7மணிக்கும், தீர்த்தத் திருவிழா நாளை காலை 10 மணிக்கும் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

நவாலி அருள்மிகு அந்திரான் முருக மூர்த்தி ஆலய தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு இடம்பெறும். தீர்த்த உற்சவம் நாளை 16 ஆம் திகதியும் மறுநாள் திருக்கல்யாணமும் நடைபெறும். (இ-100)

★ ★ ★

ஆனைக்கோட்டை வரத விக்ன விநாயகர் (சம்பந்தப் பிள்ளையார்) கோயில் தேர்த் திருவிழா இன்று திங்கள் பகல் 11.30 மணிக்கு இடம்பெறும். தீர்த்தோற்சவம் நாளை நடைபெறும். (இ-100)

★ ★ ★

அரியாலை நீர் நொச்சித் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் தேர்த் திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். நாளை காலை 9.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

வியாபாரிமூலை — இன்பர்சிட்டி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத் தேர்த்திருவிழாவான இன்று திங்கட்கிழமை காலை வசந்தமண்டபப்பூசையை அடுத்து 9.00 மணிக்கு பெருமான் தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

தீர்த்தத் திருவிழா நாளை காலை 6 மணிக்கு இடம்பெறும். (ஐ-30)


**COLLEGE Of COMMERCE**
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

**எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான**
வகுப்பு
செவ்வாய், வியாழன்
1-00 — 4-00 மணி வரை
நடைபெறுகின்றது.

ஒவ்வொரு வகுப்புக்கும் வினாத்தாள்கள் வழங்கப்படுகின்றன.

**BARATHY**
சித்தன்கேணி.

இவ்வகுப்பு ஆரம்பம்:
19-09-97 மாலை [illegible]



மெஷின் பட்டறை வேலைக்கு
**ஆள் தேவை**
மெஷின் பட்டறை வேலைக்கு அனுபவமுள்ள ஆள் தேவை. உடன் நேரில் வரவும் தங்குமிட வசதியுண்டு
தொடர்பு:
**ஜனனி நகை மாடம்**
33, மருதடி, பருத்தித்துறை.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி குணசிங்கம் வியாகேஸ்வரி (காந்தி)

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும். கொக்குவில் மேற்கு கேணியடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான குணசிங்கம் வியாகேஸ்வரி (காந்தியக்கா) 14-09-1997 ஞாயிறு அதிகாலை 5.00 மணியளவில் இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் பிரபல சுருட்டு உற்பத்தியாளர் நாகலிங்கம் குணசிங்கத்தின் (குட்டி) அன்பு மனைவியும், இராசலெட்சுமி பூமலர் (லண்டன்), சோதிமலர் (ஆஸ்திரேலியா), ஆனந்தராஜா, நாகேஸ்வரி (பிரான்ஸ்), இராணிமலர் நடராசா (கனடா), அருந்தவராஜா, நவமலர் ஜெயரட்ணம் (M.P.C.S. உடுப்பிட்டி) ஆகியோரின் சகோதரியும். நல்லம்மா, நாகேஸ்வரி, பராசக்தி, கணேசு (கிராம உத்தியோகத்தர்), தேவராஜா (தெய்வம், வர்த்தகர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கொக்குவில் மேற்கு கேணியடியில் அமைந்துள்ள இல்லத்தில் 15-09-1997 இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா குணசிங்கம்
கணவன் [குட்டி]

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(49665)

## பொன்னுச்சாமி கணேசன்

(மருந்தாளர், கூட்டுறவு வைத்தியசாலை தெல்லிப்பழை)

டச்றோட் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி கணேசன் 14-9-97 அன்று காலமாகிவிட்டார்.

இவர் திரு. திருமதி பொன்னுச்சாமியின் அன்பு மகனும், திரு. திருமதி சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மருமகனும், உஷாதேவியின் அன்புக் கணவரும், ஐஸ்வரியா, சங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபாலகிருஷ்ணன், தில்லைத்திருமகள், சொக்கநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-9-97 இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று ப்பூதவுடல் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சிவகணேச சுந்தரன்
(மைத்துனர்)

''பிரகஸ்பதி''
சுழிபுரம்.

(49666)

## திருமதி அன்னமுத்து அருளானந்தம்

(நுணாவில் மேற்கு)

நுணாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு, திருமதி கந்தையா அவர்களின் கனிஷ்ட புத்திரி திருமதி அன்னமுத்து அருளானந்தம் 14 - 09 - 97 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும், அற்புத அருந்தவராசா (முன்னாள் உத்தியோகத்தர், அரச மரக் கூட்டுத்தாபனம்) மதவாச்சி), கலாநாதன் (ஓமந்தை), கணேந்திரன் (பிரதேச செயலாளர் காரியாலயம், பளை), தவமணிதேவி, கமலா, சுசீலாதேவி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), மனோரதி (குடும்பநல உத்தியோகத்தர், மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி), இராதா (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசம் மிகுந்த தாயாரும், காலஞ்சென்ற படைவீரசிங்கம், இராஜகோபால், சற்குணதேவி, காலஞ்சென்ற யோகம், சாந்தநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும், தபோதினி, சுமித்திரன், சுபோதினி, உதயகுமார், ஹரிகரன், அனுசியா, இராகவன், வாகீசன், தினேஸ், வினோ, அனு, தாரகா, பிரதீபன், கலைச்செல்வி, கலையரசி ஆகியோரின் பேர்த்தியும், பாசம்மிகுந்த லோகீசனின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கணபதிப்பிள்ளை (சித்த ஆயுள்வேத வைத்தியர்), இரத்தினம்மா (ஆசிரியர்) ஆகியோரினதும், சரஸ்வதியினதும் செல்லச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15 - 09 - 97 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி. ப. 2.00 மணியளவில் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக காந்தாளம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி சு. அருளானந்தம்
(மகள்)

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(49668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்கெடுப்பு அமோக வெற்றி

# ஸ்கொட்லாந்துக்கு தனி நாடாளுமன்றம்!

எடின்பரோ, செப் 15

விரியிறுப்பு அதிகாரங்களை உள்ளடக்கிய தனியான நாடாளுமன்றம் ஒன்றை நிறுவுவதற்காக ஸ்கொட்லாந்து மக்களிடையே கடந்த வியாழனன்று நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு பெரு வெற்றி பெற்றுள்ளது.

தமக்குத் தனியான நாடாளுமன்றம் அமைக்கப்படுவதை ஆதரித்து ஸ்கொட்லாந்து மக்கள் அமோகமாக வாக்களித்துள்ளனர்.

ஸ்கொட்லாந்துக்கென தனியான நாடாளுமன்றம் அமைக்கப்பட வேண்டுமா?

உத்தேச நாடாளுமன்றம் வரியிறுப்பு அதிகாரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமா? என்ற இரு கேள்விகளைக் கொண்டதாக வாக்குச் சீட்டு அமைந்திந்தது.

தனியான நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதற்கு ஆதரவாக 17 லட்சத்து 75 ஆயிரத்து 45 வாக்குகளும், எதிராக 6லட்சத்து 13 ஆயிரத்து 400 வாக்குகளும் செலுத்தப்பட்டன.

உத்தேச நாடாளுமன்றம் வரியிறுப்பு அதிகாரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். என்பதற்கு ஆதரவாக 15 லட்சத்து 12 ஆயிரத்து 889 வாக்குகள் கிடைத்தன. எதிராக 8 லட்சத்து 70 ஆயிரத்து 263 வாக்குகள் செலுத்தப்பட்டன.

பிரிட்டனிடமிருந்து ஸ்கொட்லாந்துக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவது என்ற பிரதமர் ரொனி பிளயரின் திட்டத்துக்கு இந்த சர்வஜன வாக்கெடுப்பின் முடிவுகள் ஒரு பெரு வெற்றி என்று அவதானிகள் தெரிவித்தனர்.

தமது திட்டத்துக்கு ஸ்கொட்லாந்து மக்கள் அளித்த ஆதரவு குறித்து ரொனி பிளயர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் 300 வருடகால ஆட்சியின் பின்னர் ஸ்கொட்லாந்தின் முதலாவது தனி நாடாளுமன்றம் 2 ஆயிரமாம் ஆண்டளவில் நிறுவப்படும்.

புதிய நாடாளுமன்றத்தை அமைப்பதற்காக அரசமைப்புச் சட்ட மூலம் இவ்வருட முடிவுக்குள் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் –

புதிய நாடாளுமன்றத்தை அமைப்பதற்காக 1999 ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தில் முதலாவது தேர்தல் நடத்தப்படும் என்றும் தொழிற் கட்சி அரசின் ஸ்கொட்லாந்துக்கான அமைச்சர் டொனால்ட் டேவார் தெரிவித்தார்.

ஸ்கொட்லாந்தைப் போன்றே வேல்ஸ் மாகாணத்துக்கும் பிரிட்டனின் அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு இவ்வாரம் நடைபெறவுள்ளது, (ஐ)

# சீனாவின் தொழில் துறையில் மாபெரும் சீர்திருத்தங்கள்!

## அதிபர் ஜியாங் செமினுக்கு கட்சி ஆதரவு



பீஜிங், செப். 15

சீனாவை 21 ஆம்நூற்றாண்டுக்கு இட்டுச் செல்லும் வகையில் அரசுக்குச் சொந்தமான தொழில் துறைகளில் சீர்திருத்தங்களைப் புகுத்துவது என்ற அதிபர் ஜியாங் செமினின் திட்டத்துக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளியன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டை ஆரம்பித்து வைத்து அதிபர் ஜியாங் செமின் சுமார் இரண்டரை மணிநேரம் உரையாற்றினார். கம்யூனிஸ்ட் கட்சியின் 2 ஆயிரத்து 48 பிரதிநிதிகள் மாநாட்டில் குழுமியிருந்தனர்.

நாட்டின் பொருளாதாரத் துறையில் சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்துவது குறித்து அதிபர் தமது உரையில் குறிப்பிட்டார்.

அரசுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களைத் தனியார் மயமாக்கும் திட்டம் பற்றியும் அவர் குறிப்பிட்டார். அவர் தமது உரையில் ''தனியார் மயமாக்கல்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''மக்கள் மயமாக்கல்'' என்ற சொல்லையே பயன்படுத்தினார்.

இத் திட்டத்தின் கீழ் சுமார் 3 லட்சம் அரச தொழில்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படலாம்.

உலகிலேயே மிகப்பெரிய ராணுவமான சீனாவின் ராணுவத்தில்30லட்சம் வீரர்கள் உள்ளனர். 2 ஆயிரமாம் ஆண்டளவில் 5 லட்சம் வீரர்கள் குறைக்கப்படுவர் என்றும் அதிபர் ஜியாங் செமின் அறிவித்தார்.

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் குறித்து கட்சி மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

எனினும் அவை காரசாரமான விவாதங்களாக இருக்கவில்லை என்று அவதானிகள் தெரிவித்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் வேறு சில தலைவர்களும் பொருளாதார, தொழில்துறை சீர்திருத்தங்களை ஆதரித்து உரையாற்றினர்.

முதன் முறையாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டுக்கு இம்முறை வெளிநாட்டு செய்தியாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

சீனாவில் பொதுவாக கட்சி சம்பந்தப்பட்ட கொள்கை விவாதங்களின் போது செய்தியாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

பீஜிங்கில் கண்ணைக் கவரும் மாளிகை ஒன்றில் தற்போது நடைபெற்று வரும் சீனக்கம்யூனிஸ்கட்சியின் இந்த 15 ஆவது மாநாடு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டுவருகிறது. அடுத்த 5 ஆண்டுகளுக்கான அரசின் கொள்கைத் திட்டங்கள் இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்படும். (ஐ)

# முபுட்டுவின் உடல் ரபாத்தில் நல்லடக்கம்

ரபாத், செப். 15

மொரோக்கோவில் காலமான முன்னாள் ஸயர் நாட்டு அதிபர் முபுட்டுவின் உடல் நேற்று முன்தினம் மொரோக்கோ தலைநகர் ரபாத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நகரின் தெற்கே முஸ்லிம் மதத்தவர்கள் அல்லாதவர்களுக்கான இடுகாட்டில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

உடல் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் படையினர் அந்தப் பகுதியைச் சுற்றி பாதுகாப்பு வலயம் அமைத்தனர்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசு என்ற பெயரில் தற்போது விளங்கும் ஸயரை முபுட்டு 30 ஆண்டுகளாக இரும்புக்கரம் கொண்டு ஆட்சி புரிந்தார்.

கிளர்ச்சியின் பின்னர் அவர் வீழ்த்தப்பட்டு லோறன்ற் கபீலா புதிய அதிபரானது தெரிந்ததே. (ஐ-5)

# விசாகப்பட்டினம் எரிபொருள் குதத்தில் பெரும் தீ!

விசாகப்பட்டினத்தில் உள்ள இந்துஸ்தான் பெற்றோலிய சேமிப்புக் கிடங்குகளில் நேற்று அதிகாலை பெரும் தீ மூண்டது.

வெடிப்பு ஒன்றைத் தொடர்ந்து குதங்களில் தீ பரவியதாகக் கூறப்படுகிறது.

இச் சம்பவத்தில் குறைந்தது 10 பேர் காயமடைந்ததாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தீ பரவியதும் அப்பகுதியின் அயல் பிரதேசங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

மேலதிக சேத விவரங்கள் கிடைக்கவில்லை. (ஐ)

# குஜ்ரால் - நவாஸ் ஷெரீப் நியூயோர்க்கில் பேசுவர்

புதுடில்லி, செப் .15

ஐ. நாவின் 52 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க்செல்லவுள்ளஇந்தியப் பிரதமர் ஐ.கே. குஜ்ரால் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புடன் பேச்சு நடத்துவார்.

புதுடில்லியில் இத்தகவல் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டிருக்கிறது.

ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் நியூயோர்க் செல்கிறார்.

இதேவேளை இந்திய — பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் மட்டத்திலான மூன்றாவது கட்டப் பேச்சு வார்த்தை திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)

# எகிப்துக்கு கடத்தப்படவிருந்த 16 சிறுவர் கர்நாடகாவில் மீட்பு

புதுடில்லி, செப். 15

ஒட்டகச் சவாரிப் போட்டிகளின் போது ஒட்டகங்களை ஓட்டிச் செல்வதற்காக வளைகுடாவுக்கு கடத்தப்படவிருந்த பங்களாதேஷ் நாட்டுச் சிறுவர்கள்16 பேரை கர்நாடக மாநிலப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

4 வயதுக்கும் 7 வயதுக்கும் இடைப்பட்ட இந்தச் சிறுவர்களை எகிப்துக்கு செல்லவிருந்த விமானம் ஒன்றில் அனுப்ப விமான ரிக்கற்றுக்கள் பெறப்பட்டிருந்தன என்றும் கர்நாடக மாநில பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து மத்திய கிழக்கில் ஒட்டகச் சவாரிகளுக்குப் பயன்படுத்துவதற்காக சிறுவர்கள் கடத்தப்படுவது தொடர்பாக நீண்டகாலமாகவே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வந்துள்ளன.

கடந்த வாரம் டுபாய்க்கு கடத்தப்படவிருந்த பங்களாதேஷ் சிறுவர்கள் 16 பேரை புதுடில்லியில் பொலீஸார் மீட்டிருந்தனர். (ஐ)

# கொலம்பியாவில் பெரும் படை நடவடிக்கை

கொலம்பியாவின் தென் மேற்குகாட்டுப்பகுதிகளில் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களுக்கு எதிராக அந்நாட்டு அரசு பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை தொடங்கியிருக்கிறது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மாநகர சபைத் தேர்தல்களை குழப்பப் போவதாகத் தீவிரவாதிகள் எச்சரித்ததை அடுத்து அவர்களுக்கு எதிராகஇந்தப் படை நடவடிக்கை முடுக்கி விடப்பட்டிருப்பதாகதெரிவிக்கப்படுகிறது.

# 'காற்றில் ஆடும் மெழுகுவர்த்தி' பாடல் இசைத்தட்டு வெளியீடு

## விற்பனையில் உலக சாதனை

இளவரசி டயானாவுக்கு ஹேலீற்றன் ஜோன் அளித்த உணர்ச்சி மிக்க அஞ்சலியான ''காற்றினில் ஆடும் மெழுகுவர்த்தி'' என்ற பாடலின் இசைத்தட்டைக் கொள்வனவு செய்வதற்காக ஆயிரக் கணக்கான பிரிட்டிஷ் மக்கள் காத்திருக்கின்றனர். இந்த இசைத்தட்டு நேற்று முன்தினம் லண்டனில் வெளியிடப்பட்டது.

இந்த இசைத்தட்டுத்தான் உலகிலேயே ஆகக்கூடுதலாக விற்பனையான இசைத்தட்டு என்ற சாதனையைப் படைக்கவுள்ளது.

பிரிட்டனிலுள்ள இசைத்தட்டே விற்பனை செய்யும் நிலையங்கள் 15 லட்சம் இசைததட்டுக்களைத் தமக்கு வழங்குமாறு கேட்டுள்ளன. இந்த இசைத்தட்டுக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற நிதி டயானாவின் ஞாபகார்த்த நிதியத்துக்கு வழங்கப்படவிருப்பதால் அரசாங்கம் அதற்கு வரிவிலக்கை அளித்துள்ளது.

இதேவேளை — டயானாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் லண்டனில் அரசமாளிகையின் முன் வைக்கப்பட்டிருக்கும் 6 கோடி மலர்கள், 15 லட்சம் அஞ்சலி அட்டைகள் மற்றும் ஞாபகார்த்தப் பொருள்கள் ஆகியவற்றை அப்புறப்படுத்த குறைந்தது 6 வார காலம் பிடிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-5)


செல்வச்சந்நிதி கந்தனவன் தேரேறி வந்தெம்மை ஆட்கொண்டு அருள் தருவாய்!



யாழ். நகரில் ஆண்களுக்குரிய மிகச்சிறந்த தையல் வேலைகளுக்கு என்றும் நாட வேண்டிய இடம்:

இன்றைய அறிமுகம் சிற்றி ரெயிலர்ஸ் நாளைய நாகரிகம்

SEPCIALIST in WEDDING COATS & SUITS and FAMOUS for GENTS DRESS SELECTIONS

CITY TAILORS

73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

( ஓடருக்கு தலைநகை [illegible] பெற்றுக் கொள்ளவாம் ) (49662)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி-1997

யா/ஞானசாரியார் கல்லூரி

மேற்படி போட்டியில் வினாடி வினா நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தந்த மாணவர்களையும், அவர்தம் வெற்றிக்காக உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ ஞானசாரியார் கல்லூரி,
கரவெட்டி.

[496501]

## மோட்டார்சைக்கிள் விபத்தில் இருவர் காயம்

வீதியின் வளைவொன்றில் திரும்பிய மோட்டார் சைக்கிளுடன் மறுபக்கத்தில் இருந்து வேகமாக வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இருமோட்டார் சைக்கிளோட்டிகளும் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் கடந்த வெள்ளியன்று மாலை 6.15 மணிக்கு கல்வயலில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கற்குளி வடக்கைச் சேர்ந்த எஸ். அரியரத்தினம் (வயது 51), கல்வயலைச் சேர்ந்த எம். திவாகரன் (வயது 25) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (ஐ-117)

## துன்னாலை தெற்கு கொட்டு குளத்தடி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விழா

உ

காலம்: 15-09-1997 திங்கட்கிழமை
காலை 7.00 மணி முதல் 8.12 மணி வரை.

**பிரதமகுரு**

சிவப்பிரம்மஸ்ரீ - ராம். கெங்காதரக் குருக்கள்
சாரதாபீடம், அல்லியம்பதி.
சர்வபோதகம் - சபா. தேவராஜக் குருக்கள்
மாலிசந்தி விநாயகர் கோயில்.
ஆலயகுரு - நாகராஜ சர்மா
சாதகர் - ராம். சபாநாத சர்மா சாரதாபீடம்

அனைவரும் வருக ஐங்கரன் அருள்பெறுக.

ஆலய பரிபாலனசபையினர்

(49663)

## ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு: 06 — 02 — 1931

இறப்பு: 27 — 08 — 1996

### அமரர் செல்லையா கனகசபை

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர், பருத்தித்துறை)

திதி: 15 - 09 - 97 திங்கள்

எம் இனிய அப்பாவே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்.
ஆயிரமாண்டுகள் சென்றாலும்
மறந்திடுமோ எம் நெஞ்சம்.
நித்தம் நித்தம் உம்மை நினைத்து
வேகுது எம் நெஞ்சம்.
வற்றாத கண்ணீருடன் வணங்குகிறோம் நாமிங்கே.
எங்கள் அன்பு அப்பாவே!

இப்புனித நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல பரம் பொருளை வணங்குகிறோம்.

வேதனையால் தவிக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

(49633)

## காரைநகரில் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 15

காரைநகர் சிவகௌரி நிலையமும், கங்கைமதி ச.ச. நிலையமும் இணைந்து அண்மையில் தையற் கண்காட்சி ஒன்றை நடத்தின.

க. இராசசந்திரன் தலைமையில் நடந்த இந்தக் கண்காட்சியை ஈ.பி.டி.பி. அமைப்பின் தீவக அரசியல் பொறுப்பாளர் என். மனோகரன் சார்பில் தீவக துணை அரசியல் பொறுப்பாளர் என். லோகன் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

போரூட் அமைப்பின் திட்ட இணைப்பாளர் கோகுலதாஸ், சமாதான நீதிவான் பொ. நாகரத்தினம், மக்கள் குழுத் தலைவர் சிற்றம்பலம், காரைநகர் வட கிழக்கு கிராமசேவையாளர் திருப்புகழூர் சிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (ஐ-3)

## மாதாந்த பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 3 முதல் 11 வரை.
16 — 09 — 1997
காலை 8.30 மணிக்கு

மேலதிக விவரங்களுக்கு:
பரீட்சைப் பகுதி

**BOND INSTITUTES**
P. O. Box 140,
JAFFNA.

(49660)

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி.

### சகல அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவர் பட்டியல் முடிவுறுத்தல்

30. 09. 97

மேற்படி எமது சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலை நடத்துவதற்காக சகல கிளைகளிலுமுள்ள அங்கத்துவ இடாப்புகள் யாவும் 30. 09. 97 உடன் முடிவுறுத்தப்படவுள்ளது.

ஒரு பங்கின் முழுப்பெறுமதி ரூபா 100 ஆகும். எனவே முழு அங்கத்துவ பணத்தினைக் கொண்டிராத அங்கத்தவர் மிகுதிப் பங்குப் பணத்தை 30. 09. 97 வரை செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுத் தங்கள் பூரண அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

எமது சங்கத்தில் நடைபெறவுள்ள எதிர்வரும் கிளைக்குழுத் தேர்தல் 30. 09. 97 இல் உள்ளவாறான அங்கத்துவப் பட்டியலின் படி நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

க. அருந்தவபாலன்
தலைவர்

க. திருமுருகராசா
செயலாளர்

(சி/1568)

## உ ஓமந்தை, ஸ்ரீ மருதோடைக் கந்தசாமி கோயில்



புனருத்தாரண திருப்பணி நிதிக்கான

### அதிர்ஷ்ட லாபச் சீட்டு

இடம்: நல்லூர் சிவன் கோயில்

★ மட்டுப்படுத்தப்பட்ட அதிர்ஷ்ட சீட்டுக்கள் விற்பனையானதும் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். அதிர்ஷ்டம் பார்க்கப்படும் திகதி உதயன் தினசரியில் அறிவிக்கப்படும்.

அன்பளிப்பு ரூபா 50 (ஐம்பது) (அரச அனுமதி பெற்றது)
மெய்யடியார்கள் யாவரும் ஆதரவு நல்குக.

★ பரிசில்கள் ★

1) மோட்டார் சைக்கிள் M. D. 90
2) மோட்டார் சைக்கிள் YAMAHA M. 50
3) 40,000/- பெறுமதியான மாணிக்கக் கல் பதித்த அட்டியல் அல்லது சாளி மோட்டார் சைக்கிள்
4) 10 தெரிவு செய்யப்பட்ட ஆறுதற் பரிசுகளும் உண்டு

- தேவஸ்தானம்.

இந்த நடமாடும் விற்பனை நற்பணியில்

சுன்னாகம் இன்ரறக்ட் கழகம்

ஈடுபட்டுள்ளது.

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### செல்வி வினாசித்தம்பி பத்மாவதி

(ஜெயந்தி)

தாயின்மடியில்: 29 — 12 — 1966

இறைவன்அடியில்: 15 — 03 — 1997

அன்பின் ஒளி விளக்கே அமைதியின் உறைவிடமே!
வீட்டின் ஒளி விளக்கே, குடும்பத்தின் குலவிளக்கே!
மணமேடை காத்திருந்த பாவிகள் எமக்கு
பிணமேடை காட்சி தந்து போனதும்
சரிதானோ அம்மா? ஆறு மாதங்கள் அல்ல
அறுநூறு ஆண்டுகள் சென்றாலும்
ஆறாதம்மா உன்துயர்.

ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்!

ஐயா, அம்மா, சகோதரங்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

மருதங்கேணி,
தாளையடி.

(சி/1538)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை

# நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய

# இரதோற்சவச் சிறப்பிதழ்

**ஆவணித் திங்கள் 30 ஆம் நாள் திங்கட்கிழமை (15 - 09 - 97)**



## தேரேறி வரும் சித்திவிநாயகனைத் தேடுகிறோம்



அறிந்தோர் செறிந்த அரியாலை யூரில்
நிறைந்தே யிருக்கின்றநேசா ! - உறைந்திட்டு
நீடுநீர் எம்மை நிதங்காக்க வேண்டுமெனத்
தேடுகிறோம் நும்மைத் தெரிந்து.

**சுவாமி தேரில் ஆரோகணித்தல்**
**காலை 9.00 மணி**
**சுவாமி தேரிலிருந்து அவரோகணித்தல்**
**காலை 11.30 மணி**

தொகுப்பு:
**திரு. க. சண்முகலிங்கம்**
அதிபர்,
யா/அரியாலை பூம்புகார் அரசினர் பாடசாலை.

# யாழ்ப்பாடி காலத்து ஆலயம்

அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சிறந்த புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாகும். இதில் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் சித்தி விநாயகர் விக்கிரகம் மிகவும் பழைமை வாய்ந்தது. இற்றைக்கு ஏறக்குறைய எண்பத்தினான்கு வருடங்களுக்கு முன் பெரிய பிரசுகிராசியார் என்று கொண்டாடப்பட்ட ஸ்ரீமான் விசுவநாதர் காசிப்பிள்ளை அவர்களால் திரும்பவும் புதிதாகக் கட்டுவிக்கப்பட்டு ஆங்கில வருடம் 1915 இல் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது.

''சித்திவிநாயகர் விக்கிரகம் தொண்டைநாட்டிலிருந்து யாழ்ப்பாடியின் காலத்தில் அவரின் முதலமைச்சர் சேதிராயரின் வேண்டுகோளின்படி கச்சிக் கணேசையர் என்னும் பிராமணோத்தமரால் கொண்டு வரப்பட்டது என்றும், அதுவே இப்போது அரியாலையிலுள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்டிருப்பது போலும்'' என்றும் யாழ்ப்பாணச் சரித்திர நூலாசிரியருள் ஒருவரான ஸ்ரீமான் அ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் கூறிப்போந்தார்.

சங்கிலி அரசனின் ஆட்சிக்குப்பின், அதாவது பறங்கியர் ஆட்சி ஆரம்பித்தபோது, சைவக் கோயில்கள் பெரும்பாலும் தரைமட்டமாக்கப்பட்டன. மன்னாரிலிருந்து புறப்பட்டு வந்து பறங்கியரின் படை கோயில்களை அழிப்பதற்கு முன் அங்கிருந்த விலையுயர்ந்த பொருள்களையும், விக்கிரகங்களையும் அப்புறப்படுத்திவிட்டு, சன நட



மாட்டம் இல்லாத இடங்களில் மறைத்து வைத்துவிட்டுப் பிராமணர்கள் சென்றிருக்க வேண்டும். சித்தி விநாயகர் விக்கிரகமும் இவ்வாறே மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இதற்குஅத்தாட்சியாக இப்பகுதியில் கர்ணபரம்பரையாக பேசப்பட்டு வரும் வரலாறுஒன்றுள்ளது. அரியாலை நீர்நொச்சித்தாழ்வு என்று வழங்கப்படும் புண்ணிய பூமியில் மாடு மேய்த்து வந்த சிறுவர்கள் தற்செயலாக பற்றையொன்றினுள் சித்தி விநாயகர் விக்கிரகமொன்றைக்கண்டெடுத்தார்களென்றும், அதன் பின்னர் அந்த விக்கிரகத்தை வைத்துச் சுவாமி விளையாட்டு விளையாடி வந்தனர் என்றும், அதனை அறிந்த பெரியோர்கள் அவ்விடத்திலேயே சித்தி விநாயகருக்கு ஒரு கோயில் கட்டுவித்தார்கள் என்றும் பேசப்பட்டு வருவதே அவ்வரலாறு ஆகும்.

ஐந்து வாயில்களையுடைய இராஜகோபுரம் அணி செய்து நிற்கும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் பெருங்கருணைத் திறத்தினைப் பற்றி அவரை மெய்யன்போடு வழிபட்டு வரும் அடியார்களே அறிவர். எத்தனை எத்தனையோ ஆன்மகோடிகளை எம்பெருமான் தன்வயப்படுத்தி ஆண்டருள்கின்ற அருட்சிறப்புத்தான் என்னே!

திருவருள் துணை

★


**அரியாலை மஸ்ரி ரேட்**
A. M. T. (தபாற்கட்டைசந்தி),
அரியாலை.

**தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:**

**மேகாஸ் வீடியோ**
494, கண்டி வீதி, (தபாற்கட்டைச் சந்தி)
அரியாலை - யாழ்ப்பாணம்.

**அழகக்கோன் களஞ்சியம்**
ஆனந்த வடலி வீதி,
அரியாலை.

**ஜெயாஸ் சைக்கிள் சென்ரர்**
170, நெடுங்குளம் வீதி,
அரியாலை.

**ஜெகதீஸ் பலசரக்கு வாணிபம்**
பொன்னம்பலம் வீதி,
அரியாலை.

**லஷ்மி விறகுகாலை**
429, கண்டி வீதி,
அரியாலை.

**ராஜன் பின்னலகம்**
286, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**நவரத்தினம் கடை**
620, கண்டி வீதி,
அரியாலை.

**சித்ராஸ்**
முள்ளி வீதி,
அரியாலை.

**விஜயா வீடியோ**
24, சின்னாலங்கண்டு லேன்,
அரியாலை.

**ரவி களஞ்சியம்**
439, கண்டி வீதி,
அரியாலை.

**புஷ்பா வீடியோ**
707, கண்டி வீதி, அரியாலை.
(விளம்பர இல: சி-1567)



**LAUNCHING of a MONOGRAPH**

**நூல் வெளியீட்டு விழா**

**SPOKEN ENGLISH**
**THROUGH TAMIL**

by:
**M. THEIVENDRAM**
of
**KOKUVIL**
(Accountant, Jaffna M. P. C. S. Ltd.)

**Chair Person:- Mr, D. R. ARUMAYNAYAGAM**
A. D. E. (Eng.) Jaffna - 1

**Critique (in English):- Mr. T N. PUNJAKSHARAM**
English Teacher

**Critique (in Tamil):- Mr A. RAJAGOPAL - SLPS - 1**
J / Sengunthа Hindu College

**Venu:e**
**Navalar Cultural Hall, Jaffna.**

**Date:**
**1997 - 09 - 16 Tuesday**

**Time:**
**10-00 a. m. (Sri Lanka Time)**

**M. THEIVENDRAM**
Author

(சி/1560)


# விவசாய ஆராய்ச்சி நிலையத்தில்

# நிபுணர்கள், ஊழியர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கடமையாற்றுவதற்கு பல்துறையும் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் போதியளவு இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தாவரநோயியல் ஆராய்ச்சியாளர், பூச்சியியல் ஆராய்ச்சியாளர், மண் பரிசோதனை தொடர்பான ஆராய்ச்சியாளர், மகரந்தச் சேர்க்கை மூலம் புதிய இனங்களைத் தெரிவு செய்தல் தொடர்பான ஆராய்ச்சியாளர் ஆகியோர் தற்போது இல்லாத காரணத்தால் மேற்படி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அத்துடன், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் 5 பேர் கடமையாற்றிய இடத்தில் தற்போது ஒருவர் மட்டுமே கடமையாற்றுவதாகவும் —

முன்னர் விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கடமையாற்றிய ஆராய்ச்சியாளர்கள் இடமாற்றம் பெற்று சென்று விட்டதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-9)

# பொன்னாலைப் பாலத்தை அதிகாரிகள் பார்வையிட்டனர்

காரைநகர் பொன்னாலைப் பாலத்தை போக்குவரத்துக்குத் திறப்பதற்கு வசதியாக தற்சமயம் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ். விஜயம்மேற்கொண்ட அத்தியாவசிய சேவைகள் நாயகமும், வடபகுதி மீள் குடியேற்ற, புனரமைப்பு அதிகார சபைத் தலைவருமான சோமபால குணதீரவும் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும் கடந்த வியாழனன்று பொன்னாலைப் பாலத்தின் திருத்த வேலைகளை நேரில் பார்வையிட்டனர்.

திருத்தவேலைகள் முடிவடைந்ததும் இப்பாலத்தின் ஊடான போக்குவரத்து அடுததமாதத்தில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நூல்கள் அன்பளிப்பு

வலி. கிழக்கு பிரதேச சபையினரால் அண்மையில் நூலக வாரம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. விசேட ஆணையாளர் க. கேதீஸ்வரன் தலைமையில் அச்சுவேலி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் சபை நூலகத்திற்கு பொது மக்கள் நூல்களை அன்பளிப்பாக வழங்கினர். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உலகத் தமிழர் குரல் சஞ்சிகை பல பக்கங்களுடன் எங்கும் விற்பனையாகின்றது. பெரியவர்களுக்கும், மாணவர்களுக்கும் பயனுள்ளது. விலை ரூ. 15. 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (49657)

---

நாட்சாரம் வீட்டின் ஓடுகள், முதிரை, தேக்கால் ஆன நிராந்திகள், கதவுகள், யன்னல்கள் ஒரேமுறையில் ரூபா 2,50,000 ற்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 1 மணி – 4 மணி வரை. (49649)

## தவறிவிட்டது

கிருஷ்ணபிள்ளை பரமேஸ்வரி என்பவரின் 387320849V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மானிப்பாய்ச் சந்திக்கும், சண்டிலிப்பாய் சீரணிச்சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சீரணிச்சந்திக்கருகே உள்ள நியூ விநாயகம் ஸ்ரோர்ஸ் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [47425]

---

சாவகச்சேரி கிராம்புவிலைச் சேர்ந்த அருணாச்சலம் மீனலோஜினி என்பரது இல. 767671704 V கொண்ட தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன மீசாலைக்கும் சாவகச்சேரி, கச்சாய் வீதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ஸ்ரார்ரெயிலறிங் தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. (சி-1570)

## தேவை

12 - 16 வயதுக்கு இடைப்பட்ட ஆண்பிள்ளைகள் உதவியாளராக பணிபுரிவதற்கு தேவை. தொடர்பு: இல. 91/1, மின்சாரநிலைய வீதி(நவீனசந்தை முன்பாக), யாழ்ப்பாணம். [49628]

## எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில் எரு விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 22-09-97 ஆம் திகதிக்கு முன் எருவைப் பார்வையிட்டு விலை விவரங்களை சமர்ப்பிக்கவும். பதில் பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி/1556]

---

கல்வித் திணைக்களம்,
யாழ். வலயம் 2இன் முறைசாராக்கல்வி
பிரிவும், ஜேர்மன் தொழில்நுட்பக்
கூட்டுறவு நிறுவனமும் (G.T.Z.)
இணைந்து வழங்கும்

## தொழில்சார் பயிற்சி நெறி

G. T. Z. நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் புனருத்தாரண வேலைகளின் போது பின்வரும் தொழில்களில் தொழில்சார் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

1. மேசன் வேலை
2. தச்சு வேலை
3. மின்இணைப்பு வேலை
4. வர்ணம் தீட்டும் வேலை

புனருத்தாரண வேலைகள் இடம்பெறும் பாடசாலைகள்.

1. யா/ஹாட்லிக் கல்லூரி
2. யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
3. யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பா.

பாடசாலையில் இருந்து வெளியேறிய பயிற்சி பெற விரும்பும் இளைஞர்/யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை மேற்கூறிய பாடசாலைகளில் சமர்ப்பிக்கவும். நேர்முகப் பரீட்சை 20 - 09 - 1997 சனி காலை 10.00 மணிக்கு யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சி. சிவராஜா,
கல்விப்பணிப்பாளர்,
யாழ். வலயம் – 02.

(சி/1566)

---

# 31ஆம் நாள் நினைவு
# அஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 16 — 03 — 1918

உதிர்வு: 16 — 08 — 1997

## திருமதி வேலுப்பிள்ளை வள்ளியம்மை

பாசத்துடன்எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே! எந்நாளும் உங்களை மறவோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் துன்பச் செய்தி அறிந்து நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் மூலம் ஆறுதல் தெரிவித்தும், பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றி அறிதலை தெரிவிப்பதுடன் 15 - 09 - 97 (திங்கட்கிழமை) இன்று நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், உற்றார், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஸ்ரேசனடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(49645)

---

# "மதுரகவி"
## பட்டமும் பாராட்டும்



தமிழுலகிற்கு
"தமிழானந்தபாரதி"
என்ற புனை பெயர் தாங்கி
தரமான இனிமையான கவிதைகளை
படைத்துத் தருகின்ற
காரை. இந்துக்கல்லூரியின் ஆசிரியரும்
தற்பொழுது
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில்
(ஸ்ரான்லி கல்லூரி) கடமையாற்றி வருகின்ற
ஆசிரியர், இளங்கவிஞர்
காரை எம். பி
அருளானந்தன்
அவர்களுக்கு
1997-09-06 நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில்

**"மதுரகவி" என்னும் பட்டத்தை இந்துசமயப்பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.**

**"காரைமதுரகவி அருளானந்தமென பேரணிந்து வாழ்க!"**

புதுக்கவிதை பழங்கவிதை மரபு தாங்கி
பொலி கவிதை பலபாடித் தமிழ் வளர்த்து
மதிபொலியும் மக்களெலாம் அன்புபேண
வளம் பூத்த இலக்கியங்கள் ஒளி படைக்க
கதி பெருகு ஞானநலக் கல்வி பொங்கக்
கடமையிலே சிறந்த ஆசிரியனே, நீ
''மதுரகவி'' அருளானந் தப்பேர் ஓங்கி
மகாபுலவன் கம்பனைப் போல் வாழி வாழி!

அருளாசி நல்கி கவிவாழ்த்திசைத்து பட்டம் வழங்கி பாராட்டுபவர்:

அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்
தலைவர், இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்.

---

## மதுரகவிக்கு எமது நல்வாழ்த்துக்கள்

பனிப்பாகினை பிரியமாய் பருகி மகிழ்ந்திட
பல வகையான சிற்றுண்டியினை விரும்பிப் பெற்றிட
இனிமை உலகின், இன்பச்சுவையின், இணையற்ற பணியகம்

## லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(49658)

---

# UNIVERSITY OF JAFFNA
## SRI LANKA

## SIDDHA MEDICINE
## NEW ADMISSION 1995/96

Applications are invited from the candidates who obtained passes in all the four subjects in the G. C. E (A/L) Examination held in 1993/1994/1995.

Qualifications: Passes in all four subjects- Chemistry, Zoology, Botany and Physics and should have obtained 180 marks or more.

Applications should be sent on specified form on a payment of Rs. 20/- each obtainable in the following places:

1. The Deputy Registrar, Exams & Admissions Branch, University of Jaffna, Jaffna. – Payment by cash at the Shroff's Counter or by money order drawn in favour of Bursar University of Jaffna, Jaffna.
2. Co-operative Stores Ltd., 154, Woulfendal Street, Colombo - 13.
3. The Rector, Vavuniya Campus, Station Road, Vavuniya.

(2 and 3) Payment by money order drawn in favour of Bursar, University of Jaffna, Jaffna.

Date of Closing is **31 - 10 - 1997**

Request for application by post should be accompanied by postal order or money order for Rs. 20/- drawn in favour of the Bursar, University of Jaffna, Thirunelvely and a self addressed stamped envelope not less than 9''X4'' size.

Late applications cannot be entertained.

Registrar

12-09-1997

(C-1559)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முடிவு செய்வது யார்?

இலங்கை அரசாங்கம் இஸ்ரேலிடமிருந்து மேலும் எட்டு ''கிபிர்'' தாக்குதல் விமானங்களை வாங்கப்போகிறது. இந்த விமானங்களைப் பொருத்தித் தடங்கலின்றிச் சேவையில் ஈடுபடக்கூடிய நிலையில் வழங்கும் பணி, அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படும்.

போருக்குப் பயன்படுத்தவென கப்பல்கள், விசைப்படகுகள், டாங்கிகள் மற்றும் ஆயுதங்கள், ஷெல் போன்ற வெடிப் பொருள்களை வாங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக ஏற்கனவேசெய்திகள் வெளியாகி இருந்தன.

இவ்வாறு போருக்குத் தேவைப்படும் ஆயுதங்கள் மற்றும் ஆயுத தளபாடங்கள் இதுவரை நடைபெற்ற, நடைபெறும் போரில் இழக்கப்பட்டவற்றை ஈடுசெய்வதற்கான இறக்குமதிகளா? அல்லது போர் நீண்டு செல்லும் என்ற கணக்குடன் அதற்கெனக் களஞ்சியப்படுத்துவதற்காகத் தருவிக்கப்படுகின்றனவா?

இக்கேள்விகளுக்கு சரியான உறுதியான, விரிவான, விளக்கமான விடைகளை இராணுவ ஆய்வாளர்களினாலேயே கண்டறிய முடியும். இருப்பினும் சாமான்யன் ஒருவனால் அரசின் நோக்கத்தை, போக்கைப் புரிந்துகொள்ள முடியாது என்பதல்ல.

போரைத் தொடர்வதற்கு அரசு கங்கணம் கட்டியுள்ளது. வெற்றி தோல்வி காணும் வரை அதனைத் தொடரவேண்டும் என்று திட்டமிட்டுள்ளது. போர் தொடரும் என்று அது மதிப்பிடுகிறது. எப்பாடு பட்டேனும், எத்தகைய இழப்புகளை அடைந்தேனும் போரில் வென்றுவிடவேண்டும் எனவும் அது விரும்புகிறது.

அவ்வாறில்லையெனில், ஆயுதங்களையும், ஆயுத தளபாடங்களையும் இடைவெளி இன்றி தொடர்ச்சியாகக் கொள்வனவு செய்து கொண்டிருப்பதேன்? அமைதியை, சமாதானத்தை விரும்புவோர் மட்டுமன்றி சாதாரண பொதுமகனின் மனதையும் இந்தக் கேள்வியே நெருடிக்கொண்டிருக்கிறது.

மேலும் விமானங்களை வாங்கப் போகின்றார்களா? போரை நிறுத்தும் நோக்கம் அரசுக்கு இல்லைப் போலும்— இவ்வாறு தங்களுக்குள்ளேயே வினவி, பதிலுக்கு எதிர்பாராமல் கவலைப்படும் தமிழர்களே அனேகர். இதுவரை அனுபவித்த, இப்போது அனுபவிக்கும் இன்னல்கள், துன்பதுயரங்கள் இனியும் தொடரப் போகின்றனவே என்ற ஏக்கம் அவர்களுக்கு இயல்பாகவே உண்டாகிறது.

தமிழர்களுக்கு மட்டுமென்ன? தமது குடும்பங்களின் வறுமையைப் போக்குவதற்கென படைகளில் சேர்ந்து மடியும் சிங்கள கிராமப்புற இளைஞர்களின் பெற்றோர் மனதிலும் போர் முடிவு இன்றித் தொடரத் தான் வேண்டுமா? எங்கள் பிள்ளைகள் பலியாகிக் கொண்டு இருக்க வேண்டுமா?- என்ற கேள்விகள் மனங்களிலும் இயல்பாகவே எழும், உள்ளூர ஏக்கம் கலந்த அச்சம் உண்டாகும். அதனை வெளியே காட்டிக் கொள்கிறார்களோ இல்லையோ; வாய்விட்டுப் பேசுகிறார்களோ இல்லையோ; அது தனிப்பட்டவர்களைப் பொறுத்தது.

மிகச் சிறிய நாடு. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நாடு. அயல் நாடு ஒன்றுடன் அல்லது வேற்று நாடு ஒன்றுடன் போர் நடத்துவது போன்று படைபலத்தைப் பெருக்குவதற்கு இவ்வாறு கோடி கோடி ரூபாவாகப் பணத்தைச் செலவிடத்தான் வேண்டுமா? போர் வேண்டுமா? முடிவு செய்வது யார்? மக்களா அல்லது அரசா?

# அருள்பொழியும் செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனுக்குத் தேர்!

ஆடியும் பாடியும், அழுது அரற்றியும் முரசு கொட்டியும், முறையிடும் அடியவர்கள் துன்பம் தீர்ப்பவன் சந்நிதி வேலவன். ஆற்றங்கரையான் என ஆன்றோர் போற்றிய தெய்வம் தொண்டமானாற்றுக் கரையில் கடலலையின் தாலாட்டில் கருணை செய்யும் தெய்வம். இத்திருத்தலத்தின் பேரருட் சக்தியினை இயம்ப முடியாது. ஆயிரமாயிரம் அற்புதங்களைச் சந்நிதியான் சரித்திரத்தோடு அடியவர்கள் சொல்லுவதனை அறியலாம். அன்னதானக் கந்தன் என்றும், ஆண்டியாய் நிற்கும் வேலவன் என்றும், எவ்வித ஆடம்பரத்தையும் விரும்பாத திருத்தலம் என்றும் இவ்வாலயத்திற்கு நீண்ட மரபு உண்டு. மௌனத்தால் செய்யும் பூசையே இவ்வாலயத்தின் மகிமை. எல்லாம் இழந்தவர்கள் உன்னை நாம் இழக்கவில்லை என்று அவன் சன்னிதானத்தைச் சுற்றி மெய்மறந்து பிரார்த்திப்பதைக் காணலாம்.

வேண்டுவார்க்கு வேண்டுவன தரும் வேலவனின் திருக்கோயிலில் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. நாலா திசைகளில் இருந்தும் அடியவர்கள் திரண்டு வந்து கடலிலே நீராடி வடிவேலவனின் வடம் பிடித்து தேர் இழுத்து வாழ்வு கேட்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. இப் புனிதமான திருத்தலத்தை பரத்துவ குல வம்சத்தில் உதித்த கதிர்காமர் என்னும் அடியவரின் பரம்பரையினர் இன்றும் மரபு முறை தவறாத பூசை வழிபாட்டு முறைகளைப் பேணி வருகின்றனர்.

பல நூறு வருடங்களாக இவ்வாலயத்தில் பிரதானமான வழிபாடு அன்னதான வழிபாடாகும். பல அடியவர்களின் கனவிலே சந்நிதி வேலவன் தோன்றி சந்நிதியில் வந்து பசித்தவர்களுக்கு சோறு கொடு என திருவார்த்தை செவ்வி எந்நாளும் சந்நிதியான் திருவாசலில் அன்னத்திற்குக் குறைவில்லாத திருவருள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. தன்னை உணர்த்த தத்துவ ஞானிகளாகிய சீவன் முத்தர்கள் பலர் சந்நிதியான் திருவீதியில் காலத்திற்குக் காலம் குடிகொண்டு பல ஆயிரக் கணக்கான அடியவர்களின் வாழ்க்கையைப் புனிதமாக்கியிருக்கிறார்கள்.

சந்நிதியான் திருத்தல சூழலில் நாற்பதுக்கும் மேற்பட்ட அன்னதான மடங்கள் என்றோஎழுந்திருந்தன. அநியாய யுத்தத்தினால் பல திருமடங்கள் அனாதரவாகின. எனினும் வேலவனின் வேளாவேளை நடைபெறும் பூசை இன்றுவரை தங்குதடையின்றி நடைபெற்ற வண்ணமே உள்ளது. சென்ற வருடம் கூட சந்நிதியான் ஆச்சிரமத்தினர் புதிய மடத்தினை ஸ்தாபித்துள்ளனர். அடையா வாயிலாக அண்டி வருபவர்களுக்கெல்லாம் வேளைக்கு வேளை சந்நிதியான் வாசலில் சாப்பாட்டிற்குக் குறைவில்லை.

அருள் மிகுந்த இந்த ஆலயத்தில் பெருங் கோபுரமோ பெரும் பெரும் கட்டட அமைப்போ எதுவுமே கிடையாது. பல லட்சம் ரூபா செலவில் வேலவனுக்கு உருவாக்கிய தேர் கூட சில வருடங்களில் தீய சக்திகளினால் கருகிப் பொடியாகியது. முருகன் எவ்விதமான வசதிகளையும் ஏற்காது வசதியற்று வருபவர்களை வயிறார உண்பதற்கு துணை செய்வதையே தன் பெருந் திருவருளாகக் கொள்கிறான் என நாம் அறியலாம்.

சந்ததி சந்ததியாக யாழ். நாட்டு மக்கள் சந்நிதியானுக்கு நேர்த்தி வைத்து அடியவர்களுக்கு அவன் திருவாசலில் அன்னதானம் செய்கின்ற மரபு இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உறவுகளை இழந்தவர்கள் பிள்ளைகளால் உதாசீனப்பட்ட பெற்றோர்கள், முன்செய்த வினைகளால் வாழ்வில் இடர்ப்பட்டவர்கள் எனப் பலபேர் சித்தர்கள், ஞானிகள் கூடும் சந்நிதிச் சூழலில் இன்றும் சீவித்துக் கொண்டிருக்கிறார்கள். சந்நிதியான் திருக்கடலில் தீர்த்தமாடின் பூவரசு விருட்சத்தில் காட்சி கொடுக்கும் வேலவனிடம் எம் பூர்வ வினைகள் தீர்ந்து புண்ணியம் சேரும் என்பது சந்நிதி வேலவன் அடியவர்களின் நம்பிக்கை.

அடியார்களே! அற்புத ஞானம் நிறைந்த வேலவனிடம் புனித விழாக் காலத்தில் பக்தியோடு தொழுது பயன் பெறுங்கள். வேலவனே, எங்கள் எல்லோரதும் வேதனைகளையும் தீர்த்து வெற்றியோடு நாம் வாழ நல்லருள் தா என்று வேண்டுங்கள். கடலுக்குக் கூட எல்லை வைத்த கடவுளே தமிழர்களின் கண்ணீருக்கு எல்லை வைத்துக் காத்திட வேண்டும் என ஆற்றங்கரையானிடம் அன்போடு வேண்டுங்கள் ஆறுதல் தருவான் அவன்.

★

- ஆறு. திருமுருகன்

# யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடத்தி ஆசிரியர் நியமனம் வழங்கப்படும்

## பற்றாக்குறையை நீக்க ஜனாதிபதி நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய யாழ்ப்பாணத்தில் விசேட பரீட்சை நடத்தி ஆசிரிய நியமனங்கள் வழங்க ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தந்த அத்தியாவசிய சேவைகள் நாயகமும், வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரச் சபைத் தலைவருமான சோமபால குணதீர மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பட்டதாரிகள், பட்டதாரிகள் அல்லாதோர் ஆகியோருக்கு ஆசிரியர் நியமனம் வழங்க விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன.

இது தொடர்பாக நடத்தப்படும் விசேட பரீட்சையில் இருந்து பயிலுநர் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் பெரிய அளவில் பிரச்சினைகள் இல்லை என அறிகிறேன். விரைவில் பாடசாலைகளுக்கு ஆய்வு கூட உபகரணங்கள் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து திரும்பாத ஆசிரியர்களுக்கு காலக்கெடு வழங்கியுள்ளோம். அதற்குள் திரும்பாதவர்கள் வேலை இழந்தவர்களாகக் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவபீட விவகாரம்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அந்தப் பீடம் மூடப்படும் என்ற நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

மேலும் வைத்திய விரிவுரையாளர்களை மருத்துவ பீடத்துக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ கன்னியாஸ்திரியான மகப்பேறு வைத்திய நிபுணர் ஒருவர் பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார். விரைவில் அவர் இங்கு நியமிக்கப்படுவார்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் யாழ். ஆஸ்பத்திரியில் நிலவிய மருத்துவர் பற்றாக்குறை நீங்கியுள்ளது.

தற்சமயம் பிராந்திய வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையையும் நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

# மெய்வன்மை சட்ட விதிகள்: விசேட மீட்டல் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், செப். 15

மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு விசேட மீட்டல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

முதலாவது வகுப்பு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இப்பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறும்.

யாழ்ப்பாணத்திலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றும் சுமார் 180பரீட்சார்த்திகளுக்காக யாழ். மத்திய கல்லூரியில் ஒரு பரீட்சை மண்டபம் அமைக்கப்படவுள்ளது. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளும் நாளை காலை 9.30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்படும் என்றும்—

பரீட்சார்த்திகள் தமது அடையாள அட்டையுடன் சமுகம் தந்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

பரீட்சைக்கான யாழ். மாவட்ட இணைப்பாளரும், யாழ். மாவட்டவிளையாட்டு அதிகாரியுமான கே. டபிள்யு விமலராஜன் தெரிவித்தார்.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பரீட்சார்த்திகளின் நலன் கருதி வடமராட்சியில் தனியாக மீட்டல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் என்றும்—

அவ்வேளை அவர்களுக்குரிய பரீட்சை அனுமதி அட்டையும் அங்கு வைத்து விநியோகிக்கப்படும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தோர் நாளை தமது அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், பிறிதொரு தினத்தில் [illegible] அவை விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# 7 ஆயிரத்து 86 குழந்தைகளுக்கு சொட்டுமருந்து

தென்மராட்சி, செப். 15

போலியோவை முற்றாக ஒழிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த 6 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சொட்டு மருந்து வழங்கும் பணியின் போது சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 வயதுக்குட்பட்ட 7 ஆயிரத்து 86 குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்கப்பட்டதாக புள்ளி விவரங்களில் தெரியவந்துள்ளது. (ஐ-117)

# காய்ச்சலால் பலர் பீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒரு வித காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகளில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் அதிகரித்த வெப்பமே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117-152)

# விவசாய பீட மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். பல்கலைக் கழக விவசாய பீட மாணவர்களுக்கான ஒன்றுகூடல் இன்று திங்கள் காலை10.00மணிக்கு மருத்துவ பீடத்தின் இரண்டாம் மாடியில் உள்ள விவசாய பீடத்தில் இடம்பெறும். (ஐ-9)

## நாளை

**ஆவணி 31**

செவ்வாய்க்கிழமை

திதி: பூரணை

பின் இரவு 1.13 வரை.

நட்சத்திரம்: சதயம்

முற்பகல் 8.55 வரை.

பூரணை விரதம்

உமாமகேஸ்வர விரதம்

சுபநேரம்: 10.33-12.03

ராகுகாலம்: 3.03-4.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150 மெ. தொன் விதை உ. கிழங்கு அடுத்த மாதம் இங்கு வந்து சேரும்

திருநெல்வேலி, செப். 15

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் காலபோக உருளைக்கிழங்குச் செய்கைக்குத் தேவையான 150 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கை இங்கு கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு யாழ். கமநலச் சேவைத் திணைக்களம் நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

ஒல்லாந்து நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ''டிசரி'' எனப்படும் இந்த விதை உருளைக் கிழங்கு ஒக்ரோபர் மாதத்தில் கொழும்பு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதற்கு கட்டணம் எதுவும் அறவிடாது இலவசமாக கப்பலில் இடம் ஒதுக்கித்தர வேண்டும் என்று கடந்த புதனன்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் சோமபாலகுணதிரவிடம் யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை மேற்படி விதை உருளைக்கிழங்கைப் பெறுவதற்கு பகுதிப்பணம் செலுத்திய விவசாயிகள் முழுப்பணத்தையும் எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பகுதி கமநலச் சேவை கேந்திர நிலையங்களில் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஆறுமுகம் ஜீவதாஸ்

(இலங்கை மின்சாரசபை ஊழியர்)

பிறப்பு: 1964 - 02 - 21 இறப்பு: 1996 - 09 - 11

என் உயிரிலும் மேலான உயிரே! அன்பே! எங்களை விட்டு எங்கே சென்றீர்கள்? எங்களை அன்னிய இ'-த்தில் விட்டுப் போய்விட்டீர்களே! எங்களை அன்னிய இடத்தில் விட்டுச் செல்ல மனம் வந்ததோ? இப்போது நாங்கள் உங்களை விட்டு வந்துவிட்டோம். எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாக நின்றீர்கள்; இப்போது சிறகு இல்லாப் பறவை போல் நிற்கின்றோம்.

உங்கள் நினைவால் வா'டும்:

மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

6/1, மீனாட்சி அம்மன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
ப. செல்வம் (மருமகன்)
வெற்றிலைக் கடை,
மத்திய சந்தை, யாழ்ப்பாணம்.

(49667)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா இரத்தினசிங்கம்

(கனகசபை)

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா இரத்தினசிங்கம் என்பவர் மல்லாவியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இ. கமலாதேவி மற்றும் த. பத்மாதேவி, தெய்வேந்திரம் (இலங்கை உப்புக் கூட்டுத்தாபனம்), இரங்கநாதன் (சவூதி), இரவீந்திரன் (டோகா), ஸ்ரீ பவன் (இ. போ. ச., கோண்டாவில்), க. லீலாதேவி, பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வீ. இராசரத்தினம் (ஓய்வு பெற்ற இ.போ.ச. உத்தியோகத்தர்), காலஞ்சென்ற ஆ. தம்பிராசா (பீடி கம்பனி, வவுனியா), செ. கந்தசாமி (மக்கள் வங்கி, கிளிநொச்சி), சரஸ்வதிதேவி, ருக்மணிதேவி, புவனேஸ்வரி, ஜெயதேவி, தனபாக்கியம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யோகபுரம் மல்லாவியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. ஸ்ரீ பவன்
(மகன்)

சண்டிலிப்பாய், வடக்கு,
சண்டிலிப்பாய்.

(49661)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## ஆலயங்களின் விவரங்கள் சேகரிப்பு

கொழும்புத்துறை, செப்.15

யாழ். பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள சரித்திரப்பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களின் முழுமையான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விவரங்களைச் சேகரிப்பதற்காக ஆலயங்களுக்கு படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஐ-30)

## ஆங்கிலதின விழா

திருநெல்வேலி, செப்.15

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆங்கிலதினவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் கல்லூரி அதிபர் அ.சிறிக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வலயம்-1 உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) டி. ஆர். அருமைநாயகம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிஆங்கிலப் பேராசிரியர் கலாநிதி ஆ.பி.கோர்ட்பிறே போட்டர் கலந்து கொள்வார். (ஐ-135)

## கோப்பாயில் ஆயுதம் மீட்பு என தெரிவிப்பு

கொழும்பு, செப். 15

யாழ்ப்பாணம், கோப்பாய் தெற்கில் தேடுதல் நடத்திய படையினர் கைவிடப்பட்ட வீடு ஒன்றிலிருந்து ரி - 56 ரக துப்பாக்கி ஒன்றையும், ஒரு ஆர். பி. ஜி., 10 கைக்குண்டுகள், ஒரு கிளைமோர் கண்ணிவெடி ஆகியவற்றையும் கைப்பற்றினர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-5)

### எரிவாயு...

(முதலாம் பக்கத் தொடர்)

சமையல் எரிவாயு சேமிப்பு நிலையத்தில் இருந்து விசாகப் பட்டணம் துறைமுகத்துக்குச் செல்லும் குழாயில் ஏற்பட்ட கசிவே இந்த விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப் பட்டது.

தீயை அணைப்பதற்கு குஜராத்தில் உள்ள இரசாயன ஆலையில் இருந்து 45 தொன் இரசாயன நுரை வாயு அவசரமாக விமானத்தில் கொண்டு வரப்படுகிறது. (இ-ரி)

### வாழைச்...

(முதலாம் பக்கத் தொடர்)

குதல் நடத்த முற்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

மேலதிக படையினரின் உதவியுடன் பொலீஸார் பதிற் தாக்குதல் நடத்தினர் என்றும்—

இந்த மோதலின் போது பொலீஸாருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட அத்தியட்சகர் லால் ரத்னாயக்க தெரிவித்தார். (இ-5)

## மீன்பிடிக்கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்யுமாறு கோரிக்கை

கிராம மட்டத்தில் இயங்கி வரும் மீனவர் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களை வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் பதிவு செய்யுமாறு வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் சி. தவரட்ணம் கேட்டுள்ளார்.

மீனவர்களுக்கான சகல மீன்பிடி உபகரணங்களும் வடமாகாண மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மூலம் பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே வழங்கப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [ஐ-51]

## வல்வை ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர் அதிகரிப்பு

திருநெல்வேலி, செப். 15

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி இல்லாதிருப்பதால் அவசர நோயாளர்களை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதில் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இவ்வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாக டாக்டர். எஸ். மயிலேறும் பெருமாள் பதவி ஏற்றதை அடுத்து அங்கு சிகிச்சை பெற வரும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் தினசரி 350-க்கு மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள இரத்த அழுத்தம் பரிசோதிக்கும் ஒரேயொரு கருவியும் பழுதடைந்துள்ளது. ஏற்கனவே ஆறு இரத்த அழுத்தம் பரிசோதிக்கும் கருவிகள் பயன்படுத்த முடியாது பழுதடைந்த நிலையில் உள்ளன.

சிற்றூழியர் பற்றாக்குறையும் இவ் வைத்தியசாலையில் நிலவி வருகிறது. (ஐ-135)

## முட்டை விலை வீழ்ச்சி

செம்பியன்பற்று, செப்.15

குடாநாட்டில் முட்டையின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்துவருகிறது.

பருத்தித்துறை, மந்திகை பகுதிகளில் முட்டை விலை4 ரூபாவாகவீழ்ச்சியடைந்தது.

கோழி வளர்ப்பதில் பெரும் எண்ணிக்கையானோர் ஆர்வம் காட்டி வருவதே முட்டை விலை வீழ்ச்சிக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-36)

### அடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த மனுவுக்கு அனுசரணையாக வாதங்களை ஜனாதிபதி சட்டத்தரணி டி. எஸ். விஜயசிங்க நாளை மறுதினம் நீதிமன்றத்தில் முன்வைப்பார்.

புலிகளுக்கு பணம் வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அரசஅதிபர் கைதானது தெரிந்ததே. (இ-164-3)

### நவீன...

(முதலாம் பக்கத் தொடர்)

யைக் குலைக்காதே'' என்று கோஷங்கள்எழுப்பப்பட்டன.

அங்கு நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி சென்று அவர்களுக்கு விளக்கம் அளித்தார்.

''இனரீதியாக சந்தைக் கடைகள் வழங்கப்படமாட்டாது. 100 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அதில் 50 விண்ணப்பங்கள் சிங்களவர்களுடையவை. அனைத்து இனத்தவர்களுக்கும் இடம் வழங்கப்படும்'' என்று அவர் கூறினார்.

அதையடுத்து ஊர்வலம் கலைந்து சென்றது.

அதன்பின் நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தியைச் சந்தித்த திருகோணமலை இராணுவ இணைப்பு அதிகாரி கருணரத்தின. புதிய சந்தைக்குள் எவரும் பிரவேசிக்க அனுமதிக்க வேண்டாம் என்று பணிப்புரை விடுத்தார்.

அதன் பின்னர் சந்தைக்கு பொலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சகல அபிவிருத்தி வேலைகளையும் இன்று முதல் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை நிறுத்துவதென நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி முடிவு செய்துள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராய்ந்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (இ-150-3)

## சமய அறிவுப்போட்டி

யாழ். இந்து சமயப் பேரவை நடத்தும் இந்து சமய அறிவுப் போட்டியும் திருக்குறள் மனனப்போட்டியும் எதிர்வரும் 19 ஆம்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

போட்டிகள் ஆரம்பப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும். (ஐ-30)

## அற நெறிப் பாடசாலைகள் பதிவு

யாழ். மாவட்டத்தில் அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்துபவர்களும், ஆரம்பிப்பவர்களும் யாழ். மாவட்ட இந்துப பேரவையுடன் தொடர்பு கொண்டால் அவற்றைப் பதிவு செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இந்து சமயப் பேரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-30)

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி, செப். 15

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் ஆத்மஜோதி நா. முத்தையாவின் நினைவாக நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் சாவகச்சேரி கச்சாய் வீதி வீரபத்திரர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் இடம் பெறும். (ஐ-117)

## கமநல நிலையம் புத்தூரில் திறப்பு

திருநெல்வேலி, செப்.15

யுத்தகால அனர்த்தங்களினால் பலத்த சேதமடைந்த புத்தூர் கமநல சேவை கேந்திர நிலையம் பல இலட்ச ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம்திகதி நடைபெற்ற இத்திறப்பு விழாவில் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாய முறைப்படி நிலையத்தைத் திறந்து வைத்தார்.

கோப்பாய் பிரதேசசெயலர் க. கேதீஸ்வரன், யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி முகாமையாளர் க. சுந்தரேசன், சுன்னாகம் இலங்கை வங்கி உதவி முகாமையாளர் எஸ். சிவநாதன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org